தலித்முரசு - சிற்றிதழ்

'எழுச்சி தலித்முரசு' எனும் பெயரில் 1997 பிப்ரவரி 14 அன்று முதல் இதழ் வெளிவந்தது. தொடக்கத்தில் 28 பக்கத்தில் கறுப்பு - வெள்ளை அட்டையுடன் வெளிவந்தது. இப்போது 44 பக்கத்தில் வண்ண அட்டையுடன் வெளிவந்து கொண்டிருக்கிறது. தொடக்க கால ஆசிரியர், பெ.சந்திரசேகன், பொறுப்பாசிரியர், புனித பாண்டியன்.

"சாதி ஒழிப்பிற்கான, சமூக நூதிக்கான அரிய பணியில் அறிவுச் சுரங்கம் அம்பெத்கர், தன்மானச் சிங்கம் தந்தை பெரியார் வழி நின்று தலித் முரசு செயல்படும். இதுதான் எமது இலட்சியம் - இலக்கு - எல்லை" என்கிறÐ முதல் இதழ் தலையங்க அறிவிப்பு.

நேர்காணல், நூல் அறிமுகம், தொடர், வாக்குமூலம், தலையங்கம், கடிதம் போன்ற பகுதிகள் வெளியாகி வருகின்றன. இவ்விதழில் வெளியாகும் நேர்காணல்கள் குறிப்பிடத்தக்கதாகும். இந்திய அளவிலான கலை, இலக்கிய, அரசியல் ஆளுமைகளின் நேர்காணல்கள் இடம் பெற்று வருகின்றன.

கத்தார், வி.பி.சிங் உள்ளிட்டவர்களின் முக்கிய நேர்காணல்கள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. இப்படி இதுவரை (ஏப்06) 120 நேர்காணல்கள் வெளிவந்துள்ளன. நூல் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. 'யாருங்க இப்பெல்லாம் சாதி பாக்குறாங்க' பகுதியில் சாதி ஒடுக்கு முறைகள் தொடர்பான பல்வேறு செய்திகள் இடம் பெற்று வந்தன. இப்பொழுது 'மூண்டெழுவோம்' பகுதியாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

தலித்முரசின் முக்கியப் பகுதியாக முன் பக்க உள் அட்டையில் அம்பெத்கர் சிந்தனைகளும் பின்பக்க உள்ளட்டையில் பெரியார் சிந்தனைகளும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

அடுத்து, தலித்முரசில் வரும் தொடர்கள் முக்கியமானவையாகும். சுப.வீரபாண்டியன் எழுதிய 'உடைபடும் சித்திரங்கள்', ரவிக்குமார் எழுதிய 'மால்கம் எக்ஸ்', கவுதமசன்னா எழுதிய 'தலித் அரசியல்', வே.மதிமாறன் எழுதிய 'பாரதிய' ஜனதா பார்ட்டி, போன்ற முக்கியமான பல தொடர்கள் வெளிவந்துள்ளன.

ஏபி.வள்ளிநாயகம் எழுதும் 'விடுதலை இயக்க வேர்களும் விழுதுகளும்', யாக்கன் எழுதும் 'ஜனநாயக இருள்' போன்ற தொடர்கள் இடம்பெற்று வருகின்றன.

ஜூன் 2003லிருந்து 'எழுச்சி தலித்முரசு' தலித்முரசாக பெயர் மாற்றம் பெற்று புனித பாண்டியனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கிறது. 2004லிருந்து அழகிய பெரியவன், விழி.பா.இதயவேந்தன், இளங்கோவன், யாக்கன், காவ்யா, ஆகியோர் ஆசிரியர் குழவில் இடம் பெற்று வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் பிப்ரவரியில் 'ஆண்டுச்சிறப்பிதழ்' ஒன்றை வெளியிட்டு வருகிறது.

«ழகிய பெரியவன், ஜெய ராண், கோ.சுகுமாறன், வள்ளிநாயகம், அன்பு செல்வம், கே.எஸ்.முத்து, எஸ்.வி.ராஜதுரை, வ.கூதா, யாக்கன், முருகப்பன், பூவிழியன், போன்றோர் தொடர்ந்து எழுதி வருகின்றனர். அவ்வப்போது சில முக்கிய கூட்டங்களையும் நடத்தி வருகிறது தலித்முரசு.

தலித் முரசு சார்பில் 2002இல் பாமாவுக்கும் 2003 இல் அழகிய பெரியவனுக்கும் 'தலித்முரசு கலை இலக்கிய விருது' வழங்கப்பட்டுள்ளது. சில முக்கியமான தனி வெளியூடுகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஆங்கிலத்திலும் 'The Dalit' எனும் பெயரில் நான்கு இதழ்கள் வெளிவந்தன. தலித்முரசு 2005லிருந்து www.dalithmurasu.com எனும் இணைய முகவரியிலும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இனி ஆசிரியர் புனித பாண்டியனுடன்....

"தலித்முரசின் எதிர்காலத் திட்டம் என்ன?"

"அம்பெத்கர் எழுதிய 'சாதியை ஒழிக்க என்ன வழி' எனும் புத்தகத்தை தமிழில் மலிவு விலையில் வெளியிடும் திட்டமும், தலித் முரசில் எட்டுப் பக்கங்களை அதிகப்படுத்தி தலித் இலக்கியத்திற்கு ஒதுக்கும் திட்டமும் இருக்கிறது."

"உங்களைப் பற்றியும் தலித் முரசு இதழின் தொடர் பயணம் பற்றிக் கூறுங்கள்?"

"சாதியற்ற, ஏற்ற தாழ்வற்ற, சமத்துவ சமுதாயத்தை அமைக்க வேலை செய்து கொண்டிருக்கும் பத்திரிக்கையாளர்களில் நானும் ஒருவன். இந்து மத அடையாளத்துடன் வரும் ஒரு பத்திரிகை பல இலட்சங்கள் இங்கு விற்பனையாகிறது. ஆனால் சாதி ஒழிப்புக்காக வெளிவந்து கொண்டிருக்கும் தலித் முரசு பத்திரிகை ஒரு சாதிய பத்திரிகையாக அடையாளம் காணப்படுகிறது. இது தற்செயலான செயல் அல்ல. திட்டமிடப்பட்ட செயல் 'தலித்' என்பது மராத்தி சொல். இது சாதீய சொல் அல்ல. 'வேர் பிடித்தவர்கள்' என்று இதற்கு அர்த்தம். இம் மண்ணின் வேர்பிடித்த மக்கள் இன்று வேரின்றி கிடக்கிறார்கள். அவர்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கான தளமாக தலித் முரசு வந்து கொண்டிருக்கிறது. குரலற்றவர்களின் குரலாக தலித் முரசு தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது" என்கிறார், புனித பாண்டியன்.

சந்தா விவரம் :
தனி இதழ் - ரூ.6.00
ஆண்டுக் கட்டணம் - ரூ. 100.00
நூலகக் கட்டணம் - ரூ. 200.00
வாழ்நாள் கட்டணம் - ரூ. 1000.00

தொடர்பு முகவரி :
தலித்முரசு
203, ஜெயம் பிரிவு,
சித்ரா அடுக்ககம்,
9, சூளைமேடு நெடுஞ்சாலை,
சென்னை - 600 094.
தொலைபேசி : 23745473

2.¨உயிர்மை' - சிற்றிதழ்

நவீன தமிழிலக்கிய பரப்பில் பல சிற்றிதழ்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில், தனக்கென இடத்தைப் பெற்று வெளிவந்து கொண்டிருக்கிறது 'உயிர்மை' மாத இதழ். 2002 டிசம்பர் முதல் உயிர்மை பதிப்பகத்தை நடத்தத் தொடங்கிய மனுஷ்யபுத்திரன், அதன் தொடர்ச்சியாக 'உயிர்மை' இதழைக்

கொண்டுவரத் தொடங்கினார். 2003ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் உயிர்மை முதல் இதழ் வெளிவந்தது.

" தனி நபர்களை மையமாகக் கொண்ட இலக்கிய அரசியலை முடிந்தவரை தவிர்ப்பது, உலக அளவிலான கலை, இலக்கிய ஆளுமைகள் தொடர்பான பதிவுகளை விரிவாக மேற்கொள்வது" என்கிற நோக்குடன் இதழை நடத்திக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார் ஆசிரியர் மனுஷ்யபுத்திரன். உயிர்மையின் சிறப்பம்சம், தொடர்ந்து 'பத்தி'களை வெளியிடுவது. ஒரு குறிப்பிட்ட துறையைப் பற்றி ஒரு குறிப்பிட்ட எழுத்தாளர் தொடர்ந்து எழுதுவதன் மூலம்தான் அத்துறை பற்றிய விரிவான ஆதாரங்களை வாசகன் பெற முடியும் என்பதால் இத்தகைய பத்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதாகக் குறிப்பிடுகிறார். அவ்வகையில் கார்டூன் வரலாறு பற்றி டிராட்ஸ்கி மருதுவும், சுற்றுச் சூழல் பற்றி நா. முருகேச பாண்டியனும் உலகக் கவிஞர்கள் பற்றி பிரம்மராஜனும், ஆழ்நதியைத் தேடி எனும் தலைப்பில் ஜெயமோகனும் கவிதைகளோடு ஒரு சம்வாதம் எனும் தலைப்பில் ஞானக்கூத்தனும் எழுதிய தொடர்கள் குறிப்பிடத்தக்கன.

இத்தொடர்களின் ஊடாக தமிழின் மிக முக்கியமான படைப்பாளிகள் மற்றும் இளம் படைப்பாளிகளின் சிறு கதைகளையும் கவிதைகளையும் நாடகங்களையும் உயிர்மை வெளியிட்டு வருகிறது. கட்டுரைகளைப் பொறுத்தவரை யமுனா ராஜேந்திரன், அ. மார்க்ஸ், நாஞ்சில்நாடன், அ. ராமசாமி போன்றோர் எழுதிய கட்டுரைகள் வாசகர்களின் கவனத்திற்கும் விவாத்திற்கும் உரியனவாக இருந்தன.

இரண்டாவது கட்டமாக உயிர்மை எஸ். இராமகிருஷ்ணனின் 'விழித்திருப்பவனின் இரவு, சுகுமாரனின் 'பின்குறிப்பு', பிரேம்-ரமெஷின் 'முடிவுகளுக்கு வெளியே' ஆகிய தொடர்களை ஆரம்பித்தது.

எஸ். ராமகிருஷ்ணன் தன்னுடைய தொடரில் உலகில் மிக முக்கிய எழுத்தாளர்களின் எழுத்து அல்லாத பிறதுறை ஈடுபாடுகளைப் பற்றி எழுதியதன் மூலம் ஒரு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய பரந்த அக்கறைகள் பற்றிய ஒரு விரிவான பார்வையை இத்தொடரில் ஏற்படுத்தியிருக்கிறார். பிரேம்-ரமேஷ் எழுதிய தொடரில் அடிமை முறை, பின் நவீனத்துவம், கம்யூனிசம் தொடர்பாக எழுதிய கட்டுரைகள் வரவேற்பைப் பெற்றன. வாழ்வின் கசப்பும் இருளும் நிறைந்த அனுபவங்களையும் காட்சிகளையும் தமது தொடரில் பதிவு செய்திருக்கிறார் சுகுமாரன்.

நாடகத்துறை தொடர்பாகவும் உயிர்மை தொடர்ந்து தம் பங்களிப்பைச் செய்து வருகிறது. பல இளம் மற்றும் மூத்த நாடகக் கலைஞர்களின் நேர்காணல்களும் அவர்களைப் பற்றிய அறிமுகங்களும் நாடக நிகழ்வுகள் குறித்த பதிவுகளும் தொடர்ந்து இடம்பெற்று வந்திருக்கின்றன. பல புதிய கவிஞர்களையும் உயிர்மை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

பதிப்புத் துறையிலும் 'உயிர்மை பதிப்பகம்' முக்கியமான புத்தகங்களை வெளியிட்டு தனக்கென ஓரிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. சுஜாதாவின் சிறுகதைகளை 'விஞ்ஞான சிறுகதைகள்', 'ஸ்ரீரங்கத்துக் கதைகள்', தேர்ந்தெடுத்த சிறுகதைகள் இரண்டு பாகங்கள் என நான்கு பகுதிகளாக வெளியிட்டிருக்கிறது. ஜெயமோகனின் குறுநாவல்கள் முழுத் தொகுதி, எஸ்.. ராமகிருஷ்ணனின் 'நெடுங்குருதி' நாவல், சுகுமாரனின் மொழிபெயர்ப்பில் பாப்லோ நெரூடாவின் கவிதைகள், தியோடர் பாஸ்கரின் 'எம் தமிழர் செய்த படம்', எஸ்.வி. ராமகிருஷ்ணனின் 'அது அந்தக் காலம்' போன்றவை உயிர்மையின் முக்கிய வெளியீடுகளாகும்.

ஆசிரியர் மனுஷ்யபுத்திரன், நவீனத் தமிழ்க் கவிதைகளில் தனக்கென ஓரிடத்தைத் தக்க வைத்துக்கொண்டிருப்பவர். இதுவரை ஐந்து கவிதைத் தொகுப்புகளும் இரண்டு கட்டுரைத் தொகுப்புகளும்

வெளிவந்திருக்கின்றன. 'மனுஷ்யபுத்திரன் கவிதைகள்' எனும் முதல் தொகுப்பு 1988ஆம் ஆண்டு மணிமேகலை பிரசுரத்தின் வெளியீடாக வந்தது. 1993இல் 'என் படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள்', 98-இல் 'இடமும் இருப்பும்', 2001இல் 'நீராலானது' 2004இல் 'மணலின் கதை' ஆகிய கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. 'எப்போதும் வாழும் கோடை', 'காத்திருந்த வேளையில்' எனும் கட்டுரைத் தொகுப்புகள் 2004, செப்டம்பரில் வெளிவந்துள்ளன.

இளம் படைப்பாளர்களுகாக தேசிய அளவில் வழங்கப்படுகிற 'சன்ஸ்கிருதி சம்மான்' விருது 2003ஆம் ஆண்டில் மனுஷ்யபுத்திரனுக்கு வழங்கப்பட்டது.

2004இல் 'இலக்கியச் சிற்பி' எனும் விருதை 'அமெரிக்க இலக்கிய நண்பர்கள்' எனும் அமைப்பு இவருக்கு வழங்கியுள்ளது. அதே ஆண்டு மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் தனிநபர் படைப்பாற்றலுக்கு வழங்குகிற தேசிய விருதும் இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது தொடர்ந்து இதழியல் துறையிலும் பதிப்புத் துறையிலும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்.

உயிர்மையின் எதிர்காலத் திட்டம் என்ன?

"இன்றைய காலகட்டத்தில் தீவிர இலக்கியத் தேவைக்கேற்ற பணியை உயிர்மை செய்யும். காலப் பொறுத்தமற்றதை உயிர்மை செய்யாது" என்கிறார், மனுஷ்யபுத்திரன்.

தனி இதழ் : ரூ 15/ பக்கம் 64.

ஆண்டுச் சந்தா: ரூ 180/-

வெளிநாடுகளுக்கு ஆண்டுச் சந்தா: $20]

ஆன் லைன் மூலம் சந்தா செலுத்த விரும்புகிறவர்கள் www.anyindian.com மூலம் செலுத்தலாம்.

காலச்சுவடு - சிற்றிதழ் அறிமுகம் 24

"தமிழ்க் கலாச்சாரத்தைச் செழுமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் கொண்ட தமிழ் வாசகர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் தமிழ் சூழலில் எளிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்று நம்பிக்கை கொள்ள ஆசைப்படுபவனாக என்றும் இருந்து வந்திருக்கிறேன்"

- சுந்தர ராமசாமி
காலச் சுவடு, ஆண்டுமலர்`91

நவீன தமிழிலக்கியப் பரப்பில் ஓங்கி வளர்ந்து விழுதுகள் ஊன்றித் தனக்கென ஒரு தனித்த இடத்தை ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ளார், எழுத்தாளர் சுந்தரராமசாமி.அவரது இதழ் காலச் சுவடும் அப்படியே. தனக்கென ஒரு வெளியை உருவாக்கி தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.1988 ஜனவரியில் முதல் இதழ் வெளிவந்தது.

" காலச்சுவடு தமிழ்ச் சிந்தனையை ஆழப்படுத்தும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு

காலாண்டிதழ். படைப்பு, சமூக விமர்சனம், சரித்திரம், தத்துவம், கலைகள் ஆகிய துறைகளைச் சார்ந்த எழுத்துகளை இதன் வளர்ச்சிப் போக்கில் இயன்றவரைத் தரமாகத் தர இது முயலும்" என்கிறது முதல் இதழ் தலையங்கம்.முதல் 8 இதழ்கள் காலாண்டிதழாக சுந்தரராமசாமியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

அதன்பிறகு சில ஆண்டுகள் கண்ணன், லஷ்மி மணிவண்ணன், மனுஷ்ய புத்திரன் ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.ஆரம்பகாலத்தில் காலாண்டிதழாக வெளிவந்து பிறகு இருமாத இதழாகவும் வெளிவந்து கொண்டிருந்தது.இடையில் காலம் தவறியும் வந்து கொண்டிருந்தது.

1991 ல் சிறப்பிதழுடன் இதழ் நின்று போனது. ஜனவர் 92 ல் காலச்சுவடு ஆண்டு மலரை சு.ரா. தொகுத்து வெளியிட்டார்.அதன் பின்னர் சுமார் இரண்டரை ஆண்டுகள் கழித்து அக்டோபர் `1994 லிருந்து மூண்டும் வெளிவரத் தொடங்கியது.மே ` 04 லிருந்து மாத இதழாகவும் வெளிவந்து கொண்டிருக்கிறது.இதுவரை (பிப் 06) 74 இதழ்கள் வெளிவந்துள்ளன.

எஸ். நாகராஜன், அம்பை, சேரன், ரவிக்குமார், போன்றோரது விரிவான நேர்காணல்கள் வெளியாகி இருக்கின்றன. நேர்காணல் கொடுப்பவரது முழுப்பின்னணியும் , முழு ஆளுமையும் வெளிப்படும் விதத்தில் இந்த நேர்காணல்கள் அமைந்திருக்கின்றன.

தமிழினி '00, மாநாடு காலச்சுவடு பயணத்தின் முக்கிய நிகழ்வாகும். உலகம் தழுவிய தமிழ் எழுத்தாளர்களை அழைத்து வெகுஜன இலக்கியம், குழந்தை இலக்கியம் உட்பட தமிழின் அத்தனை முகங்களையும் ஆய்வுக்குட்படுத்தி கட்டுரைகள் வாசிக்கப் பெற்று விவாதங்கள் நடைபெற்றன.அந்தக் கட்டுரைகளைத் தொகுத்து புத்தகமாகவும் வெளியிட்டிருக்கிறது காலச்சுவடு அறக்கட்டளை.

2002 லிருந்து ஆசிரியர் குழுவில் ரவிக்குமாரும் ( ஆதவனும்) அரவிந்தனும் சேர்ந்தனர்.2003 ல் கனிமொழி ஆசிரியர் குழுவில் இடம் பெற்றார். ஆசிரியர் குழுவும் விரிவடைந்திருக்கிறது.பதிப்பாளராகவும், ஆசிரியராகவும் கண்ணன் பொறுப்பேற்றிருக்கிறார்.ஆசிரியர் குழுவில் ஆதவன், அரவிந்தன், நஞ்சுண்டன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

ராஜ மார்த்தாண்டன்,பாவண்ணன், குவளைக் கண்ணன், அரவிந்தன், பெருமாள் முருகன், பொ. வேல்சாமி, ஆ.இரா.வேங்கடாச்சலபதி, ரவிக்குமார், சல்மா, ஜே. பி.சாணக்யா போன்றோர் தொடர்ந்து எழுதிவருகின்றனர்.கதை, கவிதை, கட்டுரை, புத்தகவிமர்சனம், நேர்காணல், மொழிபெயர்ப்பு, விவாதம், வாசகர் கடிதம், உள்ளிட்ட பகுதிகள் வெளியாகிவருகின்றன.தமிழகம் மட்டுமின்றி புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் காலச்சுவடு மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

தமிழின் மூத்த படைப்பாளிகளும், முக்கிய ஆளுமகளும் தாங்கள் பிறந்து வளர்ந்த பண்பாட்டுச்சூழல், தொடக்ககால படைப்பு முயற்சிகள், இலக்கிய நடப்புகள் ஆகியவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் "அற்றைத் திங்கள்" எனும் கூட்டத்தை ஒவ்வொரு மாதமும் கோவையில் நடத்தி வருகிறது. சே. ராமானுஜம், அம்பை உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று இருக்கின்றனர்.

காலச்சுவடு இதழ் சார்பில் காலச் சுவடு பதிப்பகமும் 1995 லிருந்து இயங்கிவருகிறது. சுந்தரராமசாமியின் 107 கவிதைகள் தான் இப்பதிப்பகத்தின் முதல் வெளியூடு. இதுவரை 160 தலைப்புகளில் புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது.

தலித்துகளும், பெண்களும் அதிகமாக பங்கேற்கும் இதழ் காலச்சுவடு என்கிறார் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த

அரவிந்தன்.

காலச் சுவடு நவீன இலக்கியச் சூழலில் அழியாத சுவடு பதித்து வருகிறது.

ஆசிரியர் மற்றும் பதிப்பாளர் கண்ணன் பற்றி:

தற்போது 40 வயதைத் தொட்டிருக்கும் கண்ணன் நாகர்கோவிலில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.காலச்சுவடு இதழுடன் சுதர்சன்ஸ் புக்ஸ் நிறுவனத்தையும், சுதர்சனஸ் டெக்ஸ்டைல்ஸையும் சேர்த்தி நிர்வகித்து வருகிறார்.அமெரிக்க அரசு 2002 ல் நடத்திய இன்டர் நேஷனல் விசிட்டர் புரோகிராமில் மற்ற பிரபல பத்திரிகயாளர்களுடன் அமெரிக்கா சென்றுள்ளார்.மீடியா மெசேஜ் மூலம் தோழி இணையதளத்தை வடிவமைத்து தருகிறார்.

எதிர்காலச் சூழலுக்கு ஏற்ப காலச்சுவடு தன்னை தக்கவைத்துக்கொள்ளும் என்கிறார் அவர்.

சந்தா விபரம்:

தனி இதழ்: ரூ 15

முகவரி:
தலைமை அலுவலகம்:

669, கே. பி. சாலை,
நாகர்கோவில் 629001
தொ. பே. +91 - 4652 - 278525
மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in

சென்னை அலுவலகம்:

பழைய எண்: 216,
திருவல்லிகேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600025
தொ.பே. +91- 44- 42155972
மின்னஞ்சல்: kalachuvadu@gmail.com

3.தீராநதி - சிற்றிதழ்

' விதிக்கப்பட்ட ஒழுங்கை எதிர்த்து கலகம் செய்.உள் அக ஒழுங்கு எங்கே போயிற்று?' என்றபடி, புத்தக அடுக்கில் காலம் காலமாக மண்டிக் கிடக்கும் அழுக்கு , ஒட்டடைகள், தெருப் புழுதியை சுத்தம் செய்தாள், என்னையும் சேர்த்து.
வானத்துக்கு கீழே - பிரபஞ்சன்
தீராநதி, ஜனவரி' 06.

"இலக்கிய உலகில் யாருடைய வெளியையும் அபகரிக்கும் நோக்கமெல்லாம் எங்களுக்கில்லை.சிறு சிறு குழு வாதங்களுக்கு அப்பால் நம் குரலை கொண்டு போக வேண்டிய அவசியமிருக்கிறது". என்கிறது தூராநதி முதல் இதழ் தலையங்கம்.

ஜூன் '02 ல் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் ஆசிரியர் ராவ், பொறுப்பாசிரியர்கள் மணா, இரா. மணிகண்டன். செப்டம்பர் '03 இதழிலிருந்து இரா.மணிகண்டன் மட்டும் பொறுப்பாசிரியராக இருந்தார்.இப்போது அவரே ஆசிரியராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.மணாவும், இரா. மணிகண்டனும் பொறுப்பாசிரியராக இருந்த போது கலை இலக்கியத்துடன் அரசியல் விவாதங்களும் தூராநதியில் இடம் பெற்று வந்தன.மணாவின் விலகலுக்குப் பிறகு தூராநதி மாத இதழில் அரசியல் சார்ந்த விவாதங்கள் தவிர்க்கப்பட்டு முற்றிலும் இலக்கியத்திற்கான இதழாக வந்து கொண்டிருக்கிறது.நேர்காணல், தொடர்கள், சிறுகதைகள், நூல்விமர்சனங்கள், கலை, அரசியல், சென்ற தலை முறை அறிஞர்கள் பற்றிய தகவல்கள், மொழிபெயர்ப்புகள் ஆகியன வெளியாகி வருகின்றன.

தூராநதியில் கவனிக்கப்பட்டுவரும் முக்கியமான பகுதி நேர்காணல் ஆகும். பேரா. தொ. பரமசிவன், ஆண்டன் பாலசிங்கம், கே. ஏ. குண§ºகரன், சேரன், கூ. வூரமணி, கமல், பாரதிராஜா, கலைஞர். மு. கருணாநிதி, பா. செயப்பிரகாசம், ஜெயகாந்தன், ஐராவதம் மகா தேவன், மாலதி மைத்ரி, ஆர். பி. பாஸ்கரன், சிவகாமி, வைரமுத்து, மணவை முஸ்தாபா, சுஜாதா, விக்ரமாதித்யன், சந்ரு, எஸ். ராமகிருஷ்ணன்,சி.புஷ்பராஜா, ரமேஷ்- பிரேம், கனிமொழி, ஜெயமோகன், என தமிழின் முக்கிய ஆளுமைகளின் நேர்காணல்கள் இவ்விதழில் வெளியாகி வருகின்றன.

இவ்விதழில் பல தொடர்கள் இடம் பெற்று வருகின்றன. வாழ்விலே ஒருமுறை - ஜெயமோகன், காலம், கலை, கலைஞன் - சி. மோகன், கனவின் பாதை - பல்வேறு ஆளுமைகள் பற்றிய தொடர்., புலம்பல் பக்கம் - பாமரன், கதை சொல்லிகளின் கதை - இரா. மணிகண்டன், எதிர் வூடு - சிவ சங்கரி, பெண்பால் அகதிகள் - மாலதி மைத்ரி, நினைÂ¢ல் பதிந்த சுவடுகள் - வாஸந்தி,வானத்தின் கூழே - பிரபஞ்சன், பெரு வெள்ளச் சிறு துளிகள் - லதா ராமகிருஷ்ணன், ஆகிய தொடர்கள் முக்கியமானவையாகும். அக்டோபர்'03 இதழில் வெளியான ' தமிழில் பின்நவூனத்துவ நாவல்கள்' , குறித்த சர்ச்சை பல மாதங்கள் நடைபெற்றன.இவ்விவாதத்தில் பின் நவூனத்துவ எழுத்தாளர்கள் பலர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

" ஒரு கவிதையின் மவுனத்தின் ஆழத்தில்தான் வாசக¨Éக் கட்டிப் போட முடியும். அகராதி தரும் அர்த்தத்தை தொலைத்து விட்டுப் பிறிதொரு அர்த்தத்தை வார்த்தைகள் தரும் இடம் அது தான்". என்று கவிதை குறித்து சொல்கிறது செப்' 03 இதழின் தலையங்கம்.

தூராநதி மாத இதழ் , இலக்கியப் பிரியர்கள், படைப்பாளிகள், வாசகர்களின் இலக்கியத்தாகத்தை தூக்கும் நோக்கத்தில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஆசிரியர்.டாக்டர். இரா.மணிகண்டன் பற்றி..

தமிழில் முனைவர் பட்டம் பெற்ற இவர் பல ஆண்டுகளாக குமுதத்தில் பணியாற்றி வருகிறார். 'வெட்டி வேரு வாசம்' , 'கூளப்ப நாயக்கன் காதல் கதை', இலக்கியப் பிரும்மாக்கள்', ஆகிய நூல்களை எழிதியிருக்கிறார். நாட்டுப்புறவியலிலும், மருத்துவத் துறையிலும் அதிக ஈடுபாடு உடையவர்.

தனி இதழ் : ரூ.13/-, பக்கம் - 64.

தொடர்பு முகவரி:

தூராநதி,
குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்,
பழைய எண் : 151, புதிய எண்: 306,
புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை - 600010
தொ¨Ä பே º¢ : 044 - 26422146
தொலை நகல் : 044 - 26425041

4.'நிழல்' - சிற்றிதழ்

ஐந்து பாடல்கள், நான்கு சண்டைக் காட்சிகள் பறந்து பறந்து அடிக்கும் நாயகன், நாயகனைத் துரத்தித்துரத்திக் காதலிக்கும் நாயகி என வழக்கமான இத்தகைய தமிழ் சினிமாக்களின் நிழல் படாத தமிழ் பத்திரிக்கைகளே இல்லை எனலாம். அத்தகைய ரசனையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நவீன சினிமாவிற்கென 'நிழல்', 'செவ்வகம்', படப்பெட்டி' போன்ற ஒருசில இதழ்களே வெளிவருகின்றன.இவற்றில் முக்கியமானது 'நிழல்'. தரமான சினிமாவையும், கலைப்படங்களையும், குறும்படங்களையும், விவரணப்படங்களையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்குடன் வெளிவந்து கொண்டிருக்கிறது. நிழல். இது நவீன சினிமாவிற்கான களம். ஆசிரியர் பா. திருநாவுக்கரசு.

2001ம் ஆண்டு ஜூலை மாதத்தில் முதல் இதழ் வெளிவந்தது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக 22 இதழ் வெளிவந்து திரைப்பட இதழியலுக்கு முக்கிய பங்களிப்பை செய்து வருகிறது. இப்போது (ஜூலை - ஆகஸ்டு 2005) 5 - ஆம் ஆண்டு சிறப்பிதழாக வந்துள்ளது. உலகப் புகழ் பெற்ற இயக்குனர்கள், அவர்களது திரைப்படங்கள், சினிமா பற்றிய பயிற்சியும், உலக திரைப்பட வரலாறு மற்றும் இந்திய திரைப்பட வரலாறு என வாசகர்களுக்கு தேவையான தரமான சினிமாவைப் பற்றிய புரிதலைத் தரும் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு இதழிலும் ஒரு சிறந்த படத்தின் கதை வசனத்தை வெளியிடுவது நிழலின் சிறப்பாகும். அத்துடன் ஒவ்வொரு இதழிலும் பத்துக் குறும்படங்கள் பற்றிய விமர்சனம் வெளிவருகிறது. திரைத்துறை சார்ந்தவர்களின் பேட்டிகளும், திரைப்பட தொழில் நுட்பம் குறித்தும், உலக திரைப்பட விழாக்கள் குறித்தும் கட்டுரைகள் வெளிவருகின்றன. நவீன சினிமா குறித்து சிறந்த புலமை உடையவர் பா.திருநாவுக்கரசு. உலக சினிமா பற்றிய இவரது பார்வை விரிவடைய ஆடுகளம் இராமானுஜம் (ஈரான்), யமுனா ராஜேந்திரன் (லண்டன்), பாலு (சென்னை) போன்ற நண்பர்கள் உதவியுள்ளனர். தமிழகத்தில் குறும்படப் பயிற்சி பட்டறைகளையும் கருத்தரங்குகளையும் நடத்துகிறார். வெளிநாட்டில் வாழும் புலம் பெயர்ந்த நண்பர்களின் உதவியுடன் பல்வேறு நாடுகளுக்கு தமிழகக் குறும்படங்களையும் விவரணப்படங்களையும் கொண்டு செல்கிறார். குறும்பட விழாக்களில் பங்கேற்கச் செய்து பரிசுகளையும் பெற்றுத் தருகிறார்.

'பாரூஸ் நண்பர்கள் வட்டம்' ஐரோப்பா முழுக்க, தமிழகக் குறும்படங்களும் விவரணப்படங்களும் திரையிடப்பட்டு, பத்து பேருக்கு எழுபதாயிரம் ரூபாய் பரிசு அளிக்கப்பட்டது. அமெரிக்காவில் இயங்கும் ' நியூஜெர்ஸி தமிழ் சங்கம்' சார்பில் 2003 -ல் குறும்படவிழா நடைப்பெற்றது. இவ்விழாவில் வெற்றி பெற்ற பதினாறு பேருடைய படங்களுக்கு 1,30,000 ரூபாய் எழுத்தாளர் ஜெயக்காந்தன் முன்னிலையில் பரிசளிக்கப்பட்டன. டொரான்டோவில் நடைப்பெற்ற மூன்றாவது 'சர்வதேச குறும்பட விழாவில் செங்கோ

மோகனுக்கு அவர் இயக்கிய 'ஈசல்' படத்திற்கு பத்தாயிரம் ரூபாய் பரிசளிக்கப்பட்டது. சுவிஸ் குறும்பட விழாவிற்கும் தமிழகத்திலிருந்து படங்கள் அனுப்பப்பட்டன.

தொகுப்பாளர், பதிப்பாளர், பத்திரிக்கையாசிரியர், குறும்படப்பிரச்சாரகர், இசை ஆய்வாளர் என பன்முக ஆளுமை கொண்டவர் பா.திருநாவுக்கரசு. வீணை தயாரிப்பது பற்றிய குறும்படம் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஜூலை 2005 ல் தொடங்கப்பட்டுள்ள ' தமிழ்நாடு ஆவணப்படம் மற்றும் குறும்படப் படைப்பாளிகள் சங்கத்தின்' ஆலோசகராகவும் செயல்படுகிறார். குறும்படங்கள், ஆவணப்படங்கள் பற்றி 'சொல்லப்படாத சினிமா' எனும் புத்தகத்தை சமீபத்தில் தொகுத்து வெளியிட்டார்.' சோழநாடன்' எனும் புனைபெயரில் இசைக் கலைஞர்கள் பற்றிய புத்தகங்களை எழுதி வருகிறார். இதுவரையில் டி.என்.ராஜரத்தினம்பிள்ளை வரலாறு, கொடுமுடி கோகிலம் கே.பி.சுந்தராம்பாள் வரலாறு, வீணை : அதன் பேர் தனம் போன்ற இசை தொடர்பான புத்தகங்களையும், 'இன்டர்நெட் உலகில் தமிழ் தமிழன் தமிழ்நாடு ' எனும் புத்தகத்தையும் எழுதி இருக்கிறார். அத்துடன் முக்கியமான பல மூன்றாம் உலகநாடுகளின் நாவல்களின் மொழிபெயர்ப்புகளையும் தம் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டுள்ளார். இவரது அனைத்து கலை இலக்கியப் பணிகளும் தொடந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

அவரிடம் இரண்டு கேள்விகள்:

* நவீன சினிமாவிற்காக இதழ் தொடங்கும் எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?

" பன்னீர்செல்வம், நாகர்ஜுனன், வெங்கடேஷ் சக்கரவர்த்தி ஆகியோர் நடத்தி வந்த சென்னைத் திரைப்பட சங்கத்தில் நான் உறுப்பினராக இருந்தேன். அப்போது உலகப் படங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. தரமான சினிமா பற்றிய புரிதல் அப்போதுதான் எனக்கு ஏற்பட்டது. அந்த அடித்தளம் தான் இன்னும் நான் செயல்படக் காரணம். 1994 - ல் உலகச் சினிமா நூற்றாண்டு விழா தொடக்கத்தின் போது சென்னை திரைப்படச் சங்கம் செயல்படவில்லை. எனவே 'நிழல்' நடமாடும் திரைப்பட இயக்கம் எனும் அமைப்பை ஆரம்பித்து, கிராமங்களுக்குச் சென்று தரமான வெளிநாட்டுத் திரைப்படங்களை எல்லாம் போட்டுக்காட்டினோம். இன்றுவரை அப்படி செய்கிறோம். 1994 - ல் 'மக்களுக்கான சினிமா' என்கிற புத்தகத்தை வெளியிட்டோம். அதன் தொடர்ச்சியாகத்தான் 'நிழல்' இதழை தொடங்கினோம்."

* தமிழ்க் குறும்படங்களின் போக்கு தற்போது எப்படி இருக்கிறது?

"வருடத்திற்கு நூறு படங்களாவது வருகின்றன. அவற்றில் பத்து படங்கள்தான் தேறுகின்றன. டிஜிட்டல் ஹேண்டி கேமரா வரவாலும் கல்லூரிகளில் தகவல் தொடர்பியல் கல்வி அதிக அளவில் அறிமுகப்படுத்தப்படுவதாலும் இது சாத்தியமாகிறது. 'எல்லோரும் படம் எடுக்க வந்துவிட்டார்கள்' என்றொரு கோஷம் ஒலிக்கத்தொடங்கிவிட்டது. சினிமா மக்களின் கைக்கு வருவதை பொருக்க முடியாதவர்களின் ஓலம் அது. அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அதே நேரத்தில் சினிமாவில் நுழைவதற்கான நுழைவுச்சீட்டாகவும் இன்று குறும்படங்களைப் பயன்படுத்துகிறார்கள். இப்போக்கு ஆபத்தானது. எப்படி இருந்தாலும் நல்ல படங்களைக் காலம் தீர்மானிக்கும்".

தமான சினிமா தேடல் உள்ளவர்களுக்கான சிறந்த இதழ் 'நிழல்'.(நவீன சினிமாவுக்கான களம்)

தொடர்பு முகவரி:
31/48 இராணி அண்ணாநகர்,
சென்னை - 600 078.

செல்பேசி : 94444 84868

தனி இதழ்: ரூ: 30/-
ஆண்டு சந்தா: ரூ: 200/-

5.படப்பெட்டி - சிற்றிதழ் அறிமுகம்

நவீன சினிமாவிற்கான காலாண்டிதழ் 'படப்பெட்டி', மாற்று சினிமா முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் சில அமைப்புகள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. அதில் மக்கள் திரைப்பட இயக்கமும் ஒன்று. நவீன சினிமாவிற்காக நிழல், செவ்வகம் போன்ற ஒரு சில இதழ்களே வெளிவருகின்றன. இவ்வரிசையில் மக்கள் திரைப்பட இயக்கத்தின் சார்பில் 'படப்பெட்டி' இதழ் வந்து கொண்டிருக்கிறது.

"திரைப்பட அரசியலை 'படப்பெட்டி' பேசும். திரைப்படங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள், இவைகளைப் பற்றிய ஆழமான கட்டுரைகள், அறிமுகம், §¿ர்காணல் ஆகியவை ஒவ்வொரு இதழிலும் இடம் பெறும். நாடகம், ஓவியம், இசை, நாட்டுப்புறக் கலைகள் ஏதாவதொன்றைப் பற்றிய கட்டுரையும் இடம் பெறும்," என்கிற பிரகடனத்துடன் 'படப்பெட்டி' முதல் இதழ் ஜூன் 2005ல் வெளிவந்தது. கே.பி.பாலசந்தர், சிவசெந்தில்நாதன், அ.சதூ‰, ஜெ.முனுசாமி, விஜய் ஆனந்த் ஆகியோரடங்கிய ஆசிரியர் குழு உழைப்பில் வெளிவருகிறது.

காத்திரமான ஐந்து கட்டுரைகள் முதல் இதழில் இடம் பெற்றுள்ளன. கோத்ரா சம்பவத்திற்கு பிறகு ஏற்பட்ட குஜராத் கலவரத்தை மையப்படுத்தி எடுக்கப்பட்ட "ஃபைனல் சொல்யூ„ன்" ஆவணப்படம் பற்றியும் அதன் இயக்குநர் ராஜே‰ சர்மாவின் நேர்காணலும் வந்துள்ளது. 'சினிமா இன் இண்டியா' (ஜூலை - செப்'04) ஆங்கில இதழிலிருந்து இரா. குமரகுருபரனால் இது மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. குஜராத் கலவரத்தின் பின்னணியிலிருக்கும் 'திட்டமிட்ட சதி அரசியல்' பற்றியும் ராஜே‰ சர்மா எதிர்ப்புகளைப் பற்றியும் பேசுகிறÐ இக்கட்டுரை.

'தமிழ்ச்சூழலில் குறும்படங்கள்' என்னும் செழியனின் கட்டுரை, குறும்பட முயற்சிகளை விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஆராய்கிறது. அ.மங்கையின் 'விரியும் அரங்கவெளி' கட்டுரை, பெண் அரங்கம், பெண்ணிய அரங்கம் குறித்து இந்திய அளவில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை தமிழ்ச் சூழலுடன் தொடர்புறுத்தி விரிவாகப் பேசுகிறது.

"வாழ்வின் ஆழ்ந்த உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கான தீராத வேட்கையிலிருந்Ðதான் அவரது படைப்பு மனம் முகிழ்ந்தெழுகிறது" என்கிறது மலையாள இயக்குநர் ஜி.அரவிந்தன் பற்றிய 'காலமற்ற நதியில் நெடும் பயணம்' எனும் மு.இசக்கியப்பனின் கட்டுரை. அரÅ¢ந்தனைப் பற்றியும் அவரது திரைப்படங்களைப்பற்றியும் கவித்துவமான மொழி நடையில் கூறிச் செல்கிறது இக்கட்டுரை. இதழின் கடைசிக் கட்டுரை நந்திதாதாஸ் நடித்த 'பவாந்தர்' எனும் இந்திப் படம் பற்றியது. 120 நிமிடம் ஓடக்கூடிய இப்படம் உயர்சாதியை சேர்ந்தவர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பன்வாரி தேவியின் உண்மைக் கதையை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்டது. அனைத்து அதிகார மட்டத்திற்கும் ஊடுறுவியிருக்கும் சாதி ஆதிக்கத்தைப் பற்றி இக்கட்டுரை பேசுகிறது.

இப்படி முதல் இதழே மாற்றுக் கலைகள் குறித்த கனமான பதிவாக வெளிவந்திருப்பது குறிப்படத்தக்கது.

இரண்டாவது இதழில் ஸ்டிபன்பி„யூலின் 'பால்கே சகாப்தத்துக்கு முந்தைய தென்னிந்தியா' எனும் மொழி

பெயர்ப்புக் கட்டுரையும், உலகத் திரைப்படம் அறிமுகம் பகுதியில் 'மோட்டார்சைக்கிள் நாட்குறிப்புகள்' படம் பற்றிய
Å¢ஸ்வாமித்திரன் கட்டுரையும் 'மாறிவரும் திரைப்படங்களின் முகம்' எனும் மா.பாலசுப்ரமணியம் மொழி பெயர்ப்பு கட்டுரையும் கே.பி.பாலசந்திரன் காலத்தை வென்று நிலைத்து நிற்கும் பதேர் பாஞ்சாலி கட்டுரையும் 'விடுத்' ஆவணப்படம் குறித்த ஜெ.முனுசாமியின் விமர்சனக் கட்டுரையும் கூத்துக்கனல் கோ.பழனி எழுதிய 'பரிபாட்டு அடையாளத்தின் வன்முறை' எனும் கட்டுரையும் இடம் பெற்றுள்ளன.

மூன்றாவது இதழில் அரவாணிகள் குறித்த 'உறையாத நினைவுகள்' நாடகம் மற்றும் சந்தோ‰ சிவனின் 'நவராயா' சினிமா குறித்தும் வி.அரசுவின் கட்டுரையும், அனிமே„ன் குறித்த ஓவியர் டிராட்ஸ்கி மருதுவின் கட்டுரையும் 'திரைப்பட அருஞ்சொற்கள் குறித்து செழியனின் விளக்கங்களும் 'தவமாய் தவமிருந்து' திரைப்படம் குறித்து விமர்சÉமும் 1953ல் வெளிவந்த 'காந்தியைப் பற்றி ஆவணப்படம்' குறித்த கே.பி.பாலச்சந்தர் கட்டுரையும் இடம் பெற்றுள்ளன.

மக்கள் திரைப்பட இயக்கம் ஒவ்வொரு மாதமும் சென்னையில் உலகின் மிக முக்கிய திரைப்படங்களை இலவசமாக திரையிட்டுக் கொண்டிருக்கிறது. 2005இல் வெளிவந்த தமிழ்òதிரைப்படங்களின் போக்கைக் குறித்து கருத்தரங்கை ஒன்றை நடத்த திட்டமிட்டிருக்கிறது.

கருப்பு வெûளையில் 24 பக்கங்களில் வெளிவந்து கொண்டிருக்கிறது என்றாலும் கனமான பதிவுகளாக இருக்கின்றன.

படப்பெட்டி நவீன சினிமாவின் அரசியலைப் பேசுவதற்கான களமாக அமைந்துள்ளது எனலாம்.

சந்தாவிவரம் :

தனி இதழ் - ரூ.10
ஆண்டு சந்தா - ரூ.40

தொடர்பு முகவரி :

சிவ. செந்தில்நாதன்
இந்தியன் வங்கி காலனி
வள்ளலார் தெரு, பத்மநாபா நகர்,
சூளைமேடு, சென்னை - 94

6.திரை - சிற்றிதழ் அறிமுகம்

" எனது சிறு பிராயத்து ஞாபகங்களுள் எர்மியும், ஜன்னல் வழியாக படுக்கையறைக்குள் வரும் நிலாவின் வெளிச்சமும் என்னால் மறக்க முடியாதது.எனக்கு மூன்று அல்லது நான்கு வயதிருக்கும் போதுதான் எர்மி

என்னைக் கவனித்துக் கொள்ளும் ப½¢ôபெண்ணாக வந்து சேர்ந்தாள்.அவளுக்கு அப்போது பதினெட்டு வயதிருக்கும்.சற்றுச் சாய்வான கண்களும் பட்டுப் போன்ற கேசமும் கொண்டிருந்த டேனிஷ் பெண் அவள். இந்தோனேஷிய ரத்தம் அவளது சருமத்தை அடர்ந்த பழுப்பு நிÈத்திற்கு மாற்றியிருந்தது. நேரÊயாகப் பார்க்காமலே, குரலைக் கேட்காமலேயே அவள் என் அறைக்குள் வந்திருப்பதை அவளிடமிருந்து வரும் சுவாசத்தின் வினோதமான நறுமணத்தை வைத்தே உணர்ந்து கொள்வேன்"

(- மார்லன்பிராண்டோவின் தன்சரிதம்,திரை ' ஜன2006')

நவீன சினிமா, வெகுசன சினிமா இரண்டு
தளத்தையும் உள்ளடக்கிய சினிமா மாத இதழாக 'திரை' வெளி வந்து ¦¸¡ண்டிருக்கிறது. ஆசிரியர் - மணிமேகலை. ஒருங்கிணைப்பாளர், முருக சிவகுமார்.

" கலாச்சாரம், அடையாளங்கள், உறவுகள், பண்பாடு, மொழி, என்று எந்த பற்றுமற்று சினிமா போன்ற ஒரு வலிமையான ஊடகம் வெறும் நுகர்வு சாதனமாக வீரியம் பெறுவதை விசாரணைக்கு உள்ளாக்காமல் எப்படி விடுவது. மனிதத்தின் சரி பாதி ஆளுமையான பெண் சமூகத்தை வெறும் போகத்திற்கு மட்டும் பயன்படுத்திக் கொள்வதும், பார்வையாளர்களை அறியாமையில் வைத்திருக்கச்செய்யும் உள்ளடக்கத்தைத் தொடர்ந்து தருவதும், வன்முறை மற்றும் பாலியல் வக்கிரங்களை கேளிக்கைக்கான சூத்திரமாக்கியதும் அதிகாரமையங்களின் அசுத்தங்களை தக்க வைத்துக் கொண்டதும் சினிமாவின் சாதனைகள் அல்ல.சினிமாவைக் கையாள்பவரின் திட்டமிட்ட தவறுகள்" என இன்றைய தமிழ் சினிமா சூழலை விமர்சிக்கிறது முதல் இதழ் தலையங்கம்.

உலகத் திரைப்படங்கள் குறித்தும், கேரளம் உள்ளிட்ட பிற மாநிலப் படங்கள் குறித்தும், சர்வதேச திரைப்பட விழாக்கள் குறித்தும் இவ்விதழில் கட்டுரைகள் இடம் பெற்று வருகின்றன. ஒவ்வொரு இதழிலும் வெகுசன சினிமாவைச் சார்ந்த முக்கிய ஆளுமையும், நேர்காணலும் இடம் பெற்று வருகிÈது. நடிகர் சூர்யா, இயக்குநர் சேரன், இயக்குநர் மகேந்திரன், சாபு சிரில் போன்றோரின் நேர்காணல்கள் இடம் பெற்று வருகின்றன.

பிரபஞ்சன், அ. ராமசாமி, டிராட்ஸ்கி மருது, ஜெயமோகன், அருண்மொழி, டி.ஜி.ஆர்,வசந்தகுமார், செழியன், யுகபாரதி, சுகுமாரன், அறந்தை மணியன், சாருநிவேதிதா, அசோகமித்திரன், அ.மார்க்ஸ் என பலதரப்பட்டவர்களின் படைப்புகள் வெளியாகி வருகின்றன.

நவீன சினிமா என்றால் புரியாத மொழி நடையில் எழுதவேண்டும் என்கிற எண்ணத்தை உடைத்து எல்லோருக்கும் புரியும் படியான எளிய மொழி நடையில் இவ்விதழ் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன.

" உலக சினிமா, இந்திய சினிமா, தமிழ்சினிமா குறித்து ஒரு மாற்று சினிமாவுக்கான இதழாக 'திரை' தொடர்ந்து வெளிவரும்" என்கிறார் ஆசிரியர் லீனா மணிமேகலை. தமிழ்க் குடும்பங்களில் தவிர்க்க முடியாத ஒன்றாக வெகுசன சினிமா ஆகிவிட்டது.எனவே வெகுசன சினிமாவை நிராகரிக்க முடியுமா என்று கேள்வி எழுப்புகிறார் அவர்.

" திரை, பத்திரிகை மட்டுமல்ல.ஒரு மாபெரும் இயக்கத்தின் துவக்கம்.சினிமாவை நேசிக்கும் படைப்பாளிகள், பார்வையாளர்கள், விமர்சகர்கள், சிந்தனையாளர்கள் என்று அத்தனை பேரையும் ஒரு தளத்தில் இணைக்கும் முயற்சி" என்று கூறும் ஆசிரியர் 'திரை' யை ஒரு சினிமா இயக்கமாகவும் முன்னெடுத்துச் செல்லவிருப்பதாகக் கூறுகிறார்.

திரை வாசகர்களை இணைத்து மாவட்டந்தோறும் திரை இயக்கத்தை ஆரம்பித்து ஈரான் போன்ற உலக நாடுகளின் சினிமாக்களை வெகுசன மக்களிடம் கொண்டு செல்லவும் திட்டமிட்டிருக்கிறார்.

ஆசிரியர் பற்றி:

கவிஞர், குறும்பட இயக்குநர், நடிகர், பதிப்பாளர், என பன்முக ஆளுமையைக் கொண்டவர் லீனா மணிமேகலை. 2003 ல் இவரது முதல் கவிதைத் தொகுப்பு ' ஒற்றை இலையென' வெளியானது. மாத்தம்மா, பறை, தூர்ந்து போயிருந்தது காதல், break the shackles, connecting lines பலிபீடம், அலைகளைக் கடந்து ஆகிய குறும் படங்களை இயக்கியிருக்கிறார். கனவுப் பட்டறை என்ற பதிப்பகத்தையும் நடத்தி வருகிறார். நவீன இலக்கியம், மொழிபெயர்ப்பு, சினிமா ஆகியன தொடர்பாக இதுவரை இருபது புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்.

சந்தா விபரம்:

தனி இதழ் - ரூ. 15
ஆண்டுச் சந்தா - ரூ.200
2 ஆண்டுச் சந்தா - ரூ.350
ஆயுள்சந்தா - ரூ.3000

7.அணங்கு - சிற்றிதழ் அறிமுகம்

"குடும்பத்தின் வயிற்றுப் பாட்டுக்காகப் பாலியல் தொழிலாளியாக மாற்றப்பட்ட பெண்கள், விற்கப்பட்ட பெண்கள் என சமூகமே வித்தழைத்தின்ற மாடு மாதிரி நிலம் பாரித்து வீங்கிப்போய் உள்ளது. நிலத்தையும் நீரையும் தெய்வமாக வணங்குகிறவர்கள், அதனால்தான் விற்றுக்கொண்டிருக்கிறார்கள், பெண்ணையும் தெய்வமாக வணங்குபவர்கள் பெண்களையும் எல்லா சந்தையிலும் விற்றுக் கொண்டிருக்கிறார்கள்...

பெண்ணியத்தை ஏற்காத மாற்று அரசியலோ மனித விடுதலை அரசியலோ ஒரு போதும் உருவாக முடியாது. சுதந்திரமான பயமற்ற பேச்சும் விவாதமுமே அதற்கான தொடக்கம்".

எனும் அறிவிப்புடன் ஜூன் - ஆகஸ்டு 06 இல் வெளிவந்திருக்கும் சிற்றிதழ், 'அணங்கு'-காலாண்டிதழ். இவ்விதழின் ஆசிரியர், மாலதி மைத்ரி. பெண்களுக்கான இதழ்கள் பல வந்துகொண்டிருந்தாலும் நவீன இலக்கியத்தில் பெண்ணிய படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்திருக்கிறது, 'அணங்கு', 64 பக்கங்களைக் கொண்ட இவ்விதழில் கதைகள், கட்டுரைகள், நூல்விமர்சனம், மொழி பெயர்ப்புக் கட்டுரைகள், நேர்காணல், கருத்தரங்கு குறித்த விவாதங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

"இந்த மகான்கள் சகல உரிமைகளுடன் சுகபோகத்துடன் இங்கு வாழ்ந்து வரும்போது இத்தொழிலுக்குப் பல்வேறு வாழ்வியல் நிர்ப்பந்தங்களாலும் வறுமையாலும் தள்ளப்பட்ட பெண்கள் மட்டும் சமூகத்தால் ஒதுக்கப்படுவதும் பழிக்கப்படுவதும் ஏன்?" எனும் கேள்வியை எழுப்புகிறது, சபாதிவானின் நடனமாதர் பற்றிய 'டெல்லி மும்பை டெல்லி' எனும் ஆவணப்படம் குறித்த மாலதி மைத்ரியின் விமர்சனக் கட்டுரை.

ஆப்பிரிக்க அமெரிக்காவில் அடிமைகளாக வாழ்ந்து எழுத்து சுதந்திரம் பெற்று எழுதத் தொடங்கிய கருப்பினப் பெண்கள் பற்றிய 'பெண் இயந்திரம்' எனும் கட்டுரையும் முதல் இதழில் இடம் பெற்றுள்ளது.

பிரெஞ்சிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மார்க்ரித் த்யூராவின் 'உயிர்க்கொல்லி' எனும் மொழிபெயர்ப்புக் கட்டுரையும் மலையாளத்தில் எழுதிவரும் 'அனிதாதம்பியின்' நேர் காணலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட அவரது கவிதையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மனித உரிமை மூறல் குறித்து பிப்ரவரி 22லிருந்து 24 வரை டில்லி மார்க்ஸ்முல்லர் பவனில் நடைபெற்ற கருத்தரங்கு பற்றிய மாலதி மைத்ரியின் 'கண்காணிப்பு தணிக்கை தண்டனை' கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

பெண்ணியம், பெண்ணெழுத்து குறித்த சில எழுத்தாளர்களின் கருத்துகள் 'உதயம் நேர்காணல்கள்' தொகுப்பிலிருந்து சில பகுதிகள் இடம் பெற்றுள்ளன. பொன்னூலன், மனு‰யபுத்திரன், சாரு நிவேதிதா போன்ற சிலருடைய கருத்துகளுக்கு மாலதி மைத்ரியின் எதிர்வினையும் இடம் பெற்றுள்ளது.

தொடர்சியான செயல்பாட்டின் வாயிலாக பெண்ணியத்திற்கு வளம் சேர்க்கும் இதழாக 'அணங்கு' பரிணமிக்கும் என நம்பலாம்.

சந்தா விவரம்:

தனி இதழ் - ரூ.25.00

8.பனிக்குடம்
சிற்றிதழ் அறிமுகம்

பெண்ணின் அடையாளம் எது?
"பனிக்குடம்" கவிஞர் குட்டி ரேவதியை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இதழ். பெயர் பறைசாற்றுவதைப் போல இது பிரத்யேகமான பெண்ணிய இதழ்.""பெண்ணிய மொழிக்கான உச்சரிப்புகளைக் கண்டுபிடித்தலும் பெண்ணியம் ஓர் இயக்கமாக வளர சமன்பாடுகளை ஆக்கும் பெண்ணியக் கவிதைகளைப் படைத்தளித்தலும் பெண்ணியக் கருத்தாக்கத்தை உரையாடலாக்கி, அதிர்ந்து பரவச் செய்தலும் இவ்விதழின் முக்கியமான பணிகள்"" என்கிறார் ரேவதி.பிரமிளின் பிரசுரிக்கப்படாத கவிதை, பாப்லோ நெருடாவின் கவிதை குறித்த பார்வை, ஃபமிதா ரியாஸின் ஐந்து கவிதைகள், சுகிர்தராணியின் கவிதைகள், இரா.கை. சங்கரின் கவிதை என்று உண்மையிலேயே பனிக்குடத்தை வியாபித்திருக்கின்றன கவிதைகள்.அமிர்த ஷேர்கில் மற்றும் புகைப்படக் கலைஞர் டோரதியாலாங் பற்றிய குறிப்புகளும் படங்களும் உள்ளன. குறிப்புகள் மேலோட்டமாக இல்லாமல் விரிவாக இருந்திருக்கலாம்.உமா மகேஸ்வரியின் "வெறும் பொழுது" பற்றிய மாலதியின் விமர்சனம் இலக்கிய விமர்சனம் என்பதைத் தாண்டிய ஒரு வித்தியாசமான தொனியில் இருக்கிறது.கவிதை, கவிதை சார்ந்த பரிமாற்றங்களுமே பத்திரிகையின் உயிர்ச் சரடாக இருக்கும் என்று தெரிவித்திருந்தாலும் அதில் பெண்மொழி என்பதைத் தாண்டிய ஒரு தனித்துவ அடையாளத்தை உருவாக்கிக்கொள்வதும் அவசியம். பெண் என்பவள் உடல் சார்ந்தவள் மட்டுமே இல்லை. ஆனால் காலம் காலமாக அவள் அதுதான் என்று அவளுக்கு போதிக்கப்பட்டு வந்துள்ளது. பெண்ணியம் அந்தச் சித்தரிப்புகளை உடைத்து வெளிவருவதை விட்டு அதையே அதன் அடையாளமாக, முகவரியாக மாற்றிக்கொள்ள முனைவது அவசியமா?இதழ் வடிவமைப்பிலும் இன்னும் சிறிது கவனம் செலுத்தலாம்.விலை: ரூ. 10, ஆண்டு சந்தா ரூ. 50,

23, அகத்திமுத்தன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

9.அம்ருதா - சிற்றிதழ் அறிமுகம்

"நண்பர்கள் ஒன்று சேர்ந்து 'முரட்டுத்தனமான நம்பிக்கையோடும் துணிச்சலோடும் 'அம்ருதா' கலை இலக்கிய மாத இதழைக் கொண்டு வருகிறோம்... 'அம்ருதா' எந்த சூழ்நிலையிலும் தனி மனிதர்களை முன்னிலைப்படுத்தாது. நிச்சயமாகக் குழு விவாதத்தில் இறங்காது. எந்தச் சந்தர்ப்பத்திலும் நடுநிலையைத் தவறவிடாது. எதன் பொருட்டும் தன் தனித்தன்மையிலிருந்து பிறழாது. சமுகத்தின் பொது நலனை முன்னிறுத்தி யார் எழுதினாலும் அதை வெளியிடுகிற முதல் இதழாக 'அம்ருதா' இருக்கும்" எனும் அறிவிப்புடன் வெளிவந்திருக்கிறது 'அம்ருதா' நவீன கலை இலக்கிய மாத இதழ்.

எழுத்தாளர் திலகவதியை சிறப்பாசிரியராகவும் 'பிரபு திலக்'கை ஆசிரியராகவும் , தொ.பரமசிவன் , இந்திரன், பேரா.தியாகராசன் , தேவேந்திர பூபதி , துரை . கூதா, ஆகியோரை ஆலோசகர்களாகவும் கொண்டு வெளிவந்திருக்கிறது 'அம்ருதா'.

ஆகஸ்டு 2006ல் வெளிவந்த முதல் இதழில் , உமா மகேஸ்வரி , தேவதேவன்,க்ருஷாங்கினி ஆகியோரது கவிதைகளும் இமையத்தின் சிறுகதையும் கன்னட மொழிபெயர்ப்பு சிறுகதை ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் பெண்ணியக் கோட்பாட்டாளர் 'எலேன்சிஸ்' பற்றிய 'மெருசாவின் புன்னகை'(க.பஞ்சாங்கம்) 'ஹிட்லரும் உடைந்து போன இயக்கமும்' (இந்திரன்) ' குடவோலைமுறை தேர்தலா - திருவுளச்சூட்டா' (பொ.வேல்சாமி) ஆகிய கட்டுரைகளும் மலையாள எழுத்தாளர் பால் சக்கரியாவின் நேர்காணலும் 'நூல்நயம்' எனும் நூல்விமர்சனம் பகுதியும் வெளியாகியுள்ளது. 15 நிறுவனங்களின் விளம்பரங்கள் ஒரு இலக்கிய இதழுக்குக் கிடைத்திருப்பது வியப்பளிக்கிறது.

" எங்களிடம் பிரம்மாண்டமான பிரகடனங்கள் இல்லை. ஆனால் எளிய கனவுகள் உண்டு. அந்தக் கனவின் வெளிப்பாடுதான் அம்ருதா" என்கிறார் ஆசிரியர் பிரபு திலக்

சந்தாவிவரம்

தனி இதழ் - விலை å.15

முகவரி

எண்: 5, ஐந்தாம் தெரு,
சோமசுந்தரம் அவென்யு,
போரூர், சென்னை - 600116
தொலைபேசி - 22522277
மின்னஞ்சல் : amruthamagazine@yahoo.com
இணையமுகவரி : [www.amruthamagazine.com](http://www.amruthamagazine.com)

10.காட்சிப் பிழை திரை

வெகுசன சினிமாவுக்கான ஓர் ஆய்விதழ்: காட்சிப் பிழை திரை
வெகுசன சினிமாவுக்கான ஓர் ஆய்விதழ்:

தமிழ் சிறு பத்திரிக்கை வரலாற்றில் சினிமாவுக்கான இதழ்கள் மிகவும் குறைவு. அப்படி வெளிவரும் ஒரு சிலவும் பாதியில் தனது ஆயுளை முடித்துக் கொள்ளும். சிறு பத்திரிக்கை சார்ந்து வருகின்ற சினிமா இதழ்கள் ஈரான் படங்கள் போன்ற கலைப்படங்களை மட்டுமே கவனத்தில் கொள்வதாக இருக்கும். தமிழ் வெகுஜன சினிமா பற்றிய விமர்சனங்களும், ஆய்வுகளும் அதிகம் இல்லாதது பெருங்குறையாகும். இந்த இடைவெளியை நிரப்ப 'காட்சிப் பிழை திரை – திரைப்பட ஆய்விதழ்'-இன் பங்களிப்பு முக்கியமானது.

ஆகஸ்ட் – செப்டம்பர் 2010-இல் 'காட்சிப்பிழை' என்ற பெயருடன் இரு மாத இதழாகத் தொடங்கப்பட்ட இவ்விதழ் இரண்டு இதழ்களுக்குப் பிறகு 'காட்சிப் பிழை திரை' என்ற சிறிய பெயர் மாற்றத்துடன் மாத இதழாக இதுவரை 8 இதழ்கள் வெளிவந்திருப்பது தமிழ்ச் சூழலில் மகிழ வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

வ.எம்.எஸ்.சுபகுணராஜன் ஆசிரியராகக் கொண்ட இவ்விதழ் மதுரை பாபு, மலர்விழி ஜெயந்த், மோனிகா, சுந்தர்காளி, ராஜன்குறை, முகமது சஃபி ஆகியோரின் ஆசிரியர் குழு பங்களிப்பில் வெளிவருகிறது. தியோடர் பாஸ்கரன், வெங்கடேஷ் சக்கரவர்த்தி, ஸ்டீபன் ஹியூஸ், எம்.எஸ்.எஸ்.பாண்டியன் ஆகியோரடங்கிய ஆலோசனைக்குழுவுடன் மோனிகாவின் அழகான வடிவமைப்பில் இதழ் வந்து கொண்டிருக்கிறது.

இதுவரை அங்காடி தெரு, நந்தலாலா, அழகர்சாமியின் குதிரை, ஆரண்ய காண்டம் ஆகிய தமிழ் சினிமாக்கள் பற்றிய கலந்துரையாடல்கள் வெளியாகியுள்ளன. இதன் மூலம் இப்படங்கள் குறித்த பல்வேறு பார்வைகள் வாசகனுக்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த உரையாடல்கள் திடீரென்று முடிந்து விடுவது போல் உள்ளது. தொகுக்கும் போது வெட்டின்றி விரிவான முழுமையான விவாதங்களை வெளியிட்டால் நன்றாக இருக்கும்.

தமிழ் சிறு பத்திரிக்கைகளுக்கு எப்போதும் நேர்காணல்களுக்கு தனித்த இடம் உண்டு. மிகவும் பிரபலமானவர்களை மட்டும் நேர் காணுவதுதான் இங்குள்ள நடைமுறை அதற்கு மாறாக காட்சிப் பிழை திரை முகம் தெரியாத சினிமா கலைஞர்களையும் திரைப்படத் துறை சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள பலரை இந்நேர்காணல்கள் மூலம் வெளிப்படுத்துவது பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்.

சினிமா ஆபரேட்டர் கம்பம் ஷேக் பரித், திரைப்பட விமர்சகர் பேரா. வசந்தன், சினிமா சமையற்கலைஞர் சுப்ரமணி, இசை ஆர்வலர் – இசைத் தட்டு சேகரிப்பாளர் திருநின்றவூர் டி. சந்தான கிருஷ்ணன், பண்டிட் ராஜுவ் தாராநாத், தயாரிப்பாளர் மின்னல் (உதுமான் முகையதூன்), நாடக நடிகர் கலைமாமணி எஸ்.ஏ. கண்ணன் போன்ற பல நிலைகளில் சினிமாவுடன் உறவாடிய முகம் தெரியாத மனிதர்களின் கருத்துக்கள் தமிழ் சினிமாவின் விளிம்பு நிலை கருத்துக்களாக இவ்விதழில் வெளிப்படுவது சிறப்பாகும்.

ராஜன் குறை, வெங்கடேஷ் சக்கரவர்த்தி, சுப. குணராஜன் போன்றோரது கட்டுரைகள் தமிழ் சினிமாக்களை அகலமாக அலசுகிறது. கதாநாயகனின் மரணத்தைப் பேசிய ராஜன் குறையின் கட்டுரை, பாலாவின் படைப்புலகத்தை அலசும் சுப. குணராஜன் கட்டுரை, உன்னைப் போல் ஒருவன், பயணம், வானம் திரைப்படங்களை முன் வைத்து தேசியத்தின் வறுமையைச் சொல்லும் மலர்விழி ஜெயந்த் கட்டுரை போன்ற பல்வேறு ஆக்கங்கள் குறிப்பிடத்தகுந்தவை.

‘டேவிட் லூனின் ரயான்ஸ் டாட்டரும் (1970) மண்வாசனை சினிமாவின் வணிக வடிவமும்’ என்ற வெங்கடேஷ் சக்கரவர்த்தியின் கட்டுரைத் தொடர் 1976 – 1976 வரை உருவான மண் வாசனை சினிமாக்களை ஆய்வு செய்து, இவைகள் ஆங்கிலப் படங்களின் காப்பி என்று சொல்ல முடியாதபோதும் அவற்றின் நுட்பங்கள் இவற்றில் செயல்படுவதை விவரிக்கிறது. 1970களில் பாலியல் வேட்கைளை முதன்மைப்படுத்தும் தமிழ் மண்வாசனைப் படங்கள் உருவாக எந்த சமூக, கலாச்சார, சரித்திர, பொருளாதார நிகழ்கவுகள் காரணிகளாக இருந்தன என்ற கேள்வியுடன் இக்கட்டுரைத் தொடர் முடிகிறது.

சி. மோகன், சஃபி, பெருமாள் முருகன் ஆகியோரது பத்திகள் தொடர்கின்றன. தமிழ்த் திரைப்படங்களின் மனநோய் குறித்த சஃபியின் தொடர் இதுவரை யாரும் கவனிக்காத பகுதிகளை வெளிக்கொண்டு வரும் முயற்சியாகும். ‘பரண்’ பகுதி பழைய சினிமா இதழ்களின் பக்கங்களை நம் கண்முன் விரிக்கிறது. தூவிர வாசிப்பு, எழுத்து, இலக்கியம் ஆகியவற்றிற்கு எதிராகவே தமிழ் சினிமா இருந்து வந்துள்ளது. வெகுசன மக்களின் கலையாக பார்க்கப்பட்ட சினிமாவை பல தருணங்களில் இலக்கியவாதிகள் புறக்கணித்தே வந்துள்ளனர். சினிமாவுலகமும் தூவிர எழுத்தை கண்டு கொள்வதில்லை. இந்நிலை மாற இம்மாதிரியான இதழ்கள் உதவி புரியக் கூடும். மேலும் வெகுசன சினிமாவை பார்க்க, புரிந்து கொள்ள, விமர்சிக்கத் தூண்டுவதாகவும் இருக்கிறது.

தமிழ் சினிமாவில் தற்போது செய்யப்படும் ஒன்றிரண்டு சோதனை முயற்சிகள் மற்றும் அயல் மொழிப்படங்களைக் காப்பியடிக்கும் போக்கு போன்றவற்றை விளங்கிக் கொள்ளவும், வெளிப்படுத்தவும் தமிழ் சினிமா பற்றிய கோட்பாட்டுருவாக்கங்களை ஆராயும் இவ்விதழ் பயன்படுமெனத் தோன்றுகிறது. எனவே இதைப் போன்ற இதழ்கள் தொடர்ந்து வெளியாவது தமிழ்ச் சூழலில் இன்றியமையாத தேவைகளுள் ஒன்று.

தனி இதழ் ரூ. 20/- ஆண்டு சந்தா ரூ. 200/-

தொடர்புக்கு:-

காட்சிப் பிழை திரை,
மே/பா. ரியல் இம்பேக்ட் சொல்யூசன்ஸ்,
12 – மூன்றாவது தெரு,
கிழக்கு அபிராமபுரம்,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.
தொலைபேசி: 044 – 24984433
செல்: 94878 11939

11.வெள்ளைக்குதிரை – இருமாத இதழ்

அருந்ததிய மக்களின் குரலாக வெளிவரும் ஓர் இதழ்
அருந்ததிய மக்களின் குரலாக வெளிவரும் ஓர் இதழ்

ஒடுக்கப்பட்ட மக்களில் கல்வி வேலை வாய்ப்புகளில் முறையான பங்கின்றி இதுவரையில் இருந்து வந்த அருந்ததிய மக்கள் தற்போதுதான் உள் ஒதுக்கூடு பெற்று சிறிது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறார்கள்.

ஒடுக்கப்பட்ட, நலிவுற்ற இம்மக்களின் குரலாக தமிழ்நாடு சாக்கிய அருந்ததி சங்கத்தின் சார்பில் மதுரை வீரனின் வாகனப் பெயரைத் தாங்கி, இருமாத இதழாக பிப்.-மார்ச் 2011 முதல் 'வெள்ளைக்குதிரை' வெளிவந்துள்ளது. இதுவரை இரு இதழ்கள் வெளியாகியுள்ளன.

கண்ணன், காளிங்கராயன், ம. மதிவண்ணன் ஆகியோரை ஆசிரியர் குழுவிலும் நூலகண்டன் -ஐ நிர்வாக ஆசிரியராகவும் கொண்டு வெளிவரும் 'வெள்ளைக்குதிரை' இரு இதழ்களிலும் அருந்ததியச்சுடர் ராவ்சாகிப் எல்.சி. குருசாமி அவர்களின் சட்டமன்ற உரை வெளியாகியுள்ளது. தாழ்த்தப்பட்டவர்களின் நிலையை மேம்படுத்துவதற்காக நிதியை மேலும் அதிகரிக்க வேண்டுதல், தாழ்த்தப்பட்டவர்களின் ஆலோசனைக்குழுவில் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களைவிட சாதி இந்துக்கள் எண்ணிக்கை மிகுதியாக உள்ளதை எதிர்த்தல், சென்னை நகர சேரிகளின் மேம்பாட்டிற்கு பணிபுரியும் ஊழியர்கள் தலித்களாக இருக்க வலியுறுத்துதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை அடித்தட்டு தலித் மக்களுக்காக அந்நாளில் எழுப்பியதை நம் முன் பதிவு செய்கிறது.

அருந்ததிய இனத்தில் பிறந்த மதுரை வீரனை ஒரு மேல் சாதித்தன்மையோடு கட்டமைத்த தமிழ் சினிமா வரலாற்றை மீளுருவாக்கம் செய்ய வேண்டுவதன் அவசியம் பற்றிப் பேசுகிறது 'வேட்டைக்காரர்களால் எழுதப்பட்ட சிங்கத்தின் கதை' என்ற குமரன் தாஸ் கட்டுரை. தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்த ஒரு மாவீரனை கடவுள் தன்மையிலிருந்து மீட்டு ஒரு வரலாற்றுத் தலைவனாக மாற்றுவதே இன்றையத் தேவையென இக்கட்டுரை வலியுறுத்துகிறது. மதுரை வீரனை அருந்ததிய வீரனாக முன்னிறுத்தி திரைப்படம் எடுப்பதன் மூலம்தான் இவ்வரலாற்றுப் பிழையைக் களைய முடியும் என்பது உண்மையானது. ஆனால் அதற்கான களம் தமிழ் சினிமாவில் இல்லையென்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இரண்டாவது இதழில் முன்னாள் இயக்குநர் ஆர்.வி. உதயகுமாரின் திரைப்படங்களை முன் வைத்து வட்டாரத் தமிழ்ச்சினிமாவில் வெளிப்படும் சாதிய வன்மங்களையும், வக்கிரங்களையும் குமரன் தாஸ் வெளிப்படுத்துகிறார். இயக்குநர் ஆர்.வி. உதயகுமார் தற்போதைய தமிழ்ப்பட உலகில் இல்லையென்றாலும் அவருக்கு நிறைய வாரிசுகள் இருப்பதை இக்கட்டுரை குறிப்பிடத் தவறவில்லை.

தமிழ் சினிமா தலித் மற்றும் இஸ்லாமிய எதிர்ப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. கிராமியப் படம் என்றால் அங்குள்ள உயர்த்தப்பட்ட ஆதிக்க சாதிகளுக்கு சேவகம் செய்வதே தமிழ் சினிமாவின் வேலையாக உள்ளது. நகரம் சார்ந்த மசாலாப் படங்கள் எதுவாகயிருப்பினும் அதில் தீவிரவாதியாகக் காட்டப்படுவது இசுலாமியர்கள்

மட்டுமே.  ஒன்றிரண்டு விதிவிலக்குகள் இருப்பினும் மொத்தத்தில் தமிழ்த் திரையுலகம் இந்தச் சூரழிவின் பிடியில்தான் இருக்கிறது.  இதன் தொடர்ச்சியாக சுப்ரமணியபுரம், பருத்திவீரன் போன்ற வெகுவாக பேசப்படும் தமிழ்ப் படங்களில் தோய்ந்துள்ள சாதியத்தை கட்டவிழ்ப்பது இன்றைய சூழலுக்கு மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும்.

தலித் சாதிகளுக்கிடையே மிகவும் நலிவுற்ற சாதிகளுக்கு உள் ஒதுக்கீடு அளிக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயம், தமிழகத்தில் உள் ஒதுக்கீட்டுக்கு மேலெழும்பும் எதிரப்புக் குரல், வேறு மாநிலங்களில் எழுப்பப்படும் உள் ஒதுக்கீட்டுக் குரல் போன்றவற்றை 'தீர்ப்புகளின் சுருக்குகளோடு உள் ஒதுக்கீட்டை துரத்தி வரும் சாதியத்தின் வரலாறு' என்ற ம.மதிவண்ணன் கட்டுரை விளக்குகிறது.

"தமிழ்நாட்டிலுள்ள அருந்ததியர்களைப் பொறுத்தமட்டிலும் அவர்களது பிரச்சினை ஏனைய தலித்துகளின் பிரச்சினைகளைவிட தீவிரமானது.  உடனடியான தலையீட்டைக் கோருவதாக இருப்பது.  அவற்றில் தலையானது அவர்களது பிரதிநிதித்துவம் எல்லா மட்டங்களிலும் இருக்க வேண்டும் என்பதேயாகும்" என்ற வரிகள் உண்மையானதும், ஏற்றுக் கொள்ள வேண்டியதுமாகும்.

'வெள்ளை அறிவுஜீவி அடியாட்களும் அருந்ததிய வரலாறும்'  என்ற மதிவண்ணனின் கட்டுரை, காலனிய வெள்ளை அறிவுஜீவிகள் சக்கிலியர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பை ஜேம்ஸ் ஹென்றி நெல்சன், எட்கர் தர்ஸ்டன் உள்ளிட்ட சில உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

அறிஞர் கால்டுவெல், 1931இல் சென்சஸ் கமினராக இருந்த ஜெ. ஜெ. ஹட்டன் போன்றோர் பறையர்களுக்கு காட்டிய ஆதரவுக்குரலை சக்கிலியர்கள் மீது காட்டவில்லை என்பதையும் இக்கட்டுரை குறிப்பிடுகிறது.  தலித் என்பதிலும் மொழி போன்ற உட்கூறுகள் சில செயல்பட்டிருப்பதை இங்கு அவதானிக்கலாம்.  தமிழகத்தில் தற்போது இருக்கும் பிறமொழியாரை வெளியேற்றவேண்டும் என்ற பாசிச குரலுக்குக் கூட இதுவும் முன்னோடியாக இருந்திருக்கக்கூடும்.

வட கர்நாடகாவின் ஹாவேரி மாவட்டச் சிற்றூரான சாவனூரில் அருந்ததியர் தங்களது உடலில் மலத்தை பூசிக் கொண்டு நடத்திய போராட்டம் குறித்த ஆனந்த் டெல்டும்டேயின்  கருத்தை கண்ணனின் கட்டுரை மறுதளிக்கிறது.  இதில் சில நியாயப்பாடுகள் இருந்த போதிலும் குஜராத், மத்தியப்பிரதேசம், ஒரிசா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் தலித்களை காவிமயமாக்கி இசுலாமிய, கிருத்தவ சிறுபான்மையினர் மீது மோத  ஒரு  கருவியாகப் பயன்படுத்தும் போக்கினை இந்துத்துவா சக்திகள் மேற்கொண்டுள்ளது.   இதை

முறியடிக்க ஒரு வானவில் கூட்டணிக்க தயாராக வேண்டிய அவசியம் அனைத்து ஒடுக்கப்பட்டோருக்கும் உள்ளது. ஆனந்த் டெல்டும்டே சொல்வது போல் வர்க்கமாகத் திரளுவதோ, காஞ்ச அயலைய்யா போன்றோர் முன் வைக்கும் பகுஜன் கருத்தாக்கம் போன்றவைகளையும் பரிசீலிக்க வேண்டிய தேவை இப்பொழுது இருக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களை அணி திரட்ட தேவையான உத்திகளை புறந்தள்ளுவது நலமாக இருக்காது. இதிலுள்ள குறைபாடுகளையும் சிக்கல்களையும் களைந்து அடுத்த கட்ட நகர்வைச் சாத்தியமாக்குவதே தலித் இயக்கங்களின் உடனடித் தேவையாகும்.

அம்பேத்கரிய மற்றும் பெரியாரிய வெளிச்சத்தில் அருந்ததிய மக்களுடைய அரசியலையும் படைப்புக்களையும் தாங்கி இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டுமென்பதை எமது விருப்பம். தமிழக தலித் இலக்கியத்திற்கு அருந்ததியர்களின் பங்களிப்பை மேலும் கூர்மைப்படுத்த இவ்விதழ் உதவுவதோடு அம்மக்களின் வாழ்வுரிமைக்கும் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான குரலாகவும் ‘வெள்ளைக்குதிரை’ விரைந்து செல்ல வேண்டும்.

விலை: ரூ. 15/- ஆண்டு சந்தா ரூ. 150/-

சந்தா தொடர்புக்கு:-

லலிதா,

34, சக்தி நிலையம்,

தில்லை நகர், செல்வபுரம்,

கோவை – 641 026.

பேசி: 94434 16904

படைப்புகளுக்கு:

வெள்ளைக்குதிரை,

66 – சானிடோரியம் குடியிருப்பு,

பெருந்துறை சானிடோரியம்,

ஈரோடு மாவட்டம் – 638 053.